[illegible] 330.

SIDDHANTHAM
Vol. 15—No. 9

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| மலர் 15 | சித்திரபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் 1942௵ செப்டம்பர்௴ | இதழ் 9 |

உள்ளுறை — பக்கம்

மெய்கண்ட சாத்திரக் கட்டளை ... 337
வாழ்க்கையும் சமயமும் ... 346
சிவஞான சித்தியார் சுபக்கம் மூலமும் சிவாக்கிர யோகிகள் உரையும் ... 358

பத்திராசிரியர் : திரு. வி. உலகநாத முதலியார்

சித்தாந்த மகாசமாஜம்
எல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை

1942 தனிப் பிரதி [illegible]

# சென்னைத் தமிழ்ச் சங்கம்

தமிழர்கள் பல துறையிலும் முன்னுக்கு வரும்படி உழைப்பதற்கு என்று தோன்றியுள்ள இச்சங்கத்தின் திறப்புவிழா 1942-ஆு செப்டம்பர்மீ 4உ ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்குச் சிந்தாதரிப்பேட்டை உயர் நிலைப்பள்ளியில், திருவாளர். திவான்பகதூர் - ஸ்ரீ. தெய்வசிகாமணி முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் சங்கத்தின் நோக்கங்களை விளக்கித் தமிழர் இதற்குப் பேராதரவு தந்து பொருளுதவியும் செய்ய வேண்டும் என வேண்டிக்கொண்டனர். திரு. திவான்பகதூர் நாராயணசாமிப் பிள்ளை யவர்கள் "என்ன புண்ணியஞ் செய்து தமிழ் நாட்டில் தோன்றினோம். என்ன பாவம் இவ்வளவு நிலையில் இதனை வைத்துள்ளோம். எனினும் இச்சங்கம் தோன்றியுள்ளதால் இனி நெஞ்சமே அஞ்சாதே என்று கூறலாம். கோயில்களும் மடங்களும் உதவி செய்ய முன் வரலாம். ஆனால் அதனைப்பற்றி இந்நிலையில் ஒன்றும் சொல்லமுடியாது. வேண்டிய பணம் நமது ஜில்லாவிலேயே சேர முயற்சி செய்து விடலாம்" என்று உறுதி கூறி வாழ்த்தினார். திரு. இராவ்பகதூர் - இராமச்சந்திரஞ் செட்டியார், சங்கத்தின் நோக்கத்தின் இன்றியமையாமையை விளக்கி, வேலை நடக்குமானால் பணம் வந்து குவியும் என்பது திருத்தணிகைப் பணி முறையில் இருந்து விளங்குவதாகக் கூறிச் சங்கத்தை வாழ்த்தினார். திரு. திரு. வி. கலியாண சுந்தரனார் "தமிழர் தமிழல்லாதவற்றில் மன மூன்றித் தம்மையும் தம் மொழியையும் பழிக்கின்றனர். குறை குறை என்றே எங்கும் கூப்பாடு. தமிழர் காப்பி குடித்தல் முதலாக ஈடுபட்ட இடங்கள் எல்லாம் சென்று தமிழ் முழக்கம் செய்ய இச்சங்கம் தோன்றியுள்ளது. இது நீடூழி வாழ்க" என்று வாழ்த்தினார். திரு. வரதராசனார், குறை உணர்ந்தவன் குணவான் என்பது பழமொழி. மிகக் கீழான நிலைமைக்கு வந்துள்ள தமிழர் இச்சங்க முயற்சியால் மேலுக்கு [illegible] வேண்டும் என்று வாழ்த்தினார். திரு. இராசேசுவரி அம்மையார், இவ்வுலகிற்கு உயிர் கொடுப்பது ஞாயிறுதான். அந்த ஞாயிற்றுக்கிழமையில் இந்தச் சங்கம் தோன்றுவது நல்ல அறிகுறியே யாகும் என வாழ்த்தினார். தலைவர் [illegible]ரையில் எல்லோரையும் உறுப்பினராகச் சேருமாறு வற்புறுத்தினார். மீனாக்ஷிசுந்தரனார் எதிர் காலத்தில் நம்பிக்கை கொண்டு உழை[illegible] முன் வருமாறு அனைவரையும் வேண்டிக்கொண்டு எல்லோர்க்கும் நன்றி செலுத்தினார்.

Reg. M. 2330

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.


| மலர் 15 | சித்திரபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் 1942ஆம் செப்டம்பர்மீ | இதழ் 9 |
|---|---|---|


## மெய்கண்ட சாத்திரக் கட்டளை

[மு. அருணசலம்]

(மலர் - 15 - இதழ் - 8 - 320-ம் பக்கத் தொடர்ச்சி)

தைசத வாங்காரம் சாத்துவித குணத்தைப் பற்றி யெழும். வைகரி யாங்காரம் ராசத குணத்தைப் பற்றி யெழும். பூதாதி யாங்காரம் தாமத குணத்தைப் பற்றி யெழும்.

சூக்குமை யென்கிற வாக்கு, வசனங்களைத் தோற்றுவிக்கும் பொருட்டு, ஆன்மாக் கேவலப்பட்டுக் கிடக்கும் அவ[illegible]த்தில், சோதியாய் நேர்மையாய் ஒரு நாதத்தை யுண்டாக்கித் துரியத்திலே யாக்கும். பைசந்தி யென்கிற வாக்கு உந்தித் தானத்திலே பொருந்தி, வெவ்வேறு அக்கரங்களைப் பொருந்தத்தக்கதாகத் தோன்றுகிற முறைமை[illegible]

மயில் முட்டைச் சலத்திலே பஞ்ச வர்ணங்களுங் கூடி நின்றாற்போல, சித்தத்திலே உணர்வு மாத்திரமாய் நிற்கும். மத்திமை யென்கிற வாக்கு, பிராண வாயுவைக் கூடி வருகிற அக்கரங்களைப் பொருந்தத்தக்க கன்ம ரூபங்க ளெல்லாவற்றையும் ஒழுங்குடனே நிறுத்தி, செவிக்குட் கேளாமல் இவனுக்குள்ளே கேட்கத்தக்க ஒலியாய், கண் டத் தானத்திலே முழங்காநிற்கும். வைகரி யென்கிற வாக்கு, உதானவாயுவைக் கூடின பிராணவாயுத் தன்னோடுங் கூடி, நாக்கு அண்ணம் உதடு பல் மூக்கு என்கிற ஐந்துத் தானத் திலேயும் புறப்பட்டுச் செவியின் பகுதியிலே கேட்க நினைந்த பொருள்களைச் சொல்லாநிற்கும்.

இந்த நாலு வாக்குங் காரியப்படும் முறைமை எப்படி யென்னில், சுத்த தத்துவத்தினாலே காரியப்படுமென அறிக.

ஆகத் தத்துவந் தொண்ணூற்றாறு. இந்தத் தத்துவந் தொழிற்படும் அவதரத்தில் ஒன்றில் அனேகமாம். இந்தத் தத்துவந் தொண்ணூற்றாறுதோறும் ஆன்மா கன்மத்துக் கீடாகச் சகலாவத்தைப்படும்பொழுது இவையிற்றின் தொழில் விளங்கித் தோன்றுமென அறிக.

## அவத்தைகள்

இனி அவத்தையாவன: கேவல சகல சுத்தம்என மூன்று. இதிற் கேவலமாவது, ஆன்மா ஆணவ மலத்துடனே பொருந்தி ஒன்றையும் அறியாதிருத்தல். சகலமாவது, மாயா தேகத்தைப் பொருந்தி, தத்துவங்களுடனே கூடி வினையைப் பொசித்தல். சுத்தமாவது இவையிரண்டும் நீங்கி, அருளைப் பொருந்தி, ஆனந்தத்திலேயே அழுந்துவது.

இந்தக் காரணவவத்தை மூன்றில், கேவலாவத்தையின் காரியமான கீழாலவத்தை ரு, சகலத்தின் காரியமான மேலவத்தை ரு, சுத்தத்தின் காரியமான நின்மலா வத்தை ரு. ஆகக் காரியவவத்தை கரு.

### கீழாலவத்தை

இதிற் கேவலத்தின் காரியமான கீழாலவத்தை ஐந்தாவன: கீழாலவத்தைச் சாக்கிரம், கீழாலவத்தைச் சொப்பனம், கீழாலவத்தைச் சுழுத்தி, கீழாலவத்தைத் துரியம், கீழாலவத்தைத் துரியாதீதம் ஆக ரு. இதற்குத் தத்துவம் ௩௫ அவையேதென்னில், சாக்கிரத்தில் ௩௫, சொப்பனத்தில் ௨௫, சுழுத்தியில் ௩, துரியத்தில் ௨, துரியாதீதத்தில் க.

### கீழாலவத்தைச் சாக்கிரம்

அது காரியப்படுகிற தெப்படி யென்னில், ஞானேந்திரியங்கள் ரு, கன்மேந்திரியங்கள் ரு, தன்மாத்திரைகள் ரு, அந்தக்கரணங்கள் ௪, புருடன் க, ஆக உட்கருவி ௨௰; புறக்கருவியில் வாயு க௰, வசனாதிகள் ரு, ஆக ௩௫ கருவிகளுடனே கூடி, மற்ற சுக கருவிகளையும் விட்டு, லலாடத்தானத்திலே அறிவு மயங்கிநின்ற அவத்தை கீழாலவத்தைச் சாக்கிரம்.

### கீழாலவத்தைச் சொப்பனம்

ஞானேந்திரியங்கள் ரு-ம், கன்மேந்திரியங்கள் ரு-ம் ஆகப் பத்தும் லலாடத்தானத்தில் நிற்க, மற்ற ௨௫ கருவிகளுடனே கண்டத்தானத்திலே நின்ற அவதரம் கீழாலவத்தைச் சொப்பனம்.

### கீழாலவத்தைச் சுழுத்தி

வசனாதிகள் ரு-ம், தன்மாத்திரைகள் ரு-ம், சித்தம் நீங்கலாக அந்தக்கரணங்கள் ௩-ம், பிராணவாயு நீங்கலாக வாயுக்கள் ௯-ம் ஆக ௨௨ கருவிகளுங் கண்டத்தானத்திலே நிற்க, மற்ற மூன்று கருவிகளுடனே இருதயத்தானத்திலே நின்ற அவதரம் கீழாலவத்தைச் சுழுத்தி.

### கீழாலவத்தைத் துரியம்

சித்தம் ஒன்றும் இருதயத்தானத்திலே நிற்க, மற்ற [1]இரண்டு கருவிகளுடனே நாபித்தானத்திலே நின்ற அவதரம் கீழாலவத்தைத் துரியம்.

### கீழாலவத்தைத் துரியாதீதம்

பிராணவாயு வொன்றும் நாபித்தானத்திலே நிற்க, மற்ற உள்ளம் (புருடன்) ஒன்றும் மூலாதாரத்திலே அடங்கின அவதரம் கீழாலவத்தைத் துரியாதீதம்.

இப்படி கீழாலவத்தை யறிக.

### மேலாலவத்தை

இனி, சகலத்தின் காரியமான மேலாலவத்தை ஐந்தும் எப்படி யென்னில், மேலாலவத்தைச் சாக்கிரம், மேலாலவத்தைச் சொப்பனம், மேலாலவத்தைச் சுழுத்தி, மேலாலவத்தைத் துரியம், மேலாலவத்தைத் துரியாதீதம் ஆக ரு. இதற்குத் தத்துவந் தொண்ணூற்ருறு. அவையேதென்னில், சாக்கிரத்தில் ருரு, சொப்பனத்தில் உ௰, சுழுத்தியில் க௰, துரியத்தில் ரு, துரியாதீதத்தில் எ.

இது காரியப்படுகிற தெப்படி என்னில், ஆன்மா கேவலத்தைப் பொருந்தி அதீதப்பட்டுக் கிடக்கு மவதரத்தில், சிவதத்துவமும் சத்திதத்துவமும் ஆன்மாவுக்குள்ள கன்மத்துக்கீடாகச் சூக்குமையைக் காரியப்படுத்தித் துரியத்திலே யாக்கும்; சாதாக்கிய தத்துவம் பைசந்தியைக் காரியப்படுத்தி சுழுத்தியிலே யாக்கும்; ஈசுர தத்துவம் மத்திமையைக் காரியப்படுத்திச் சொப்பனத்திலே யாக்கும்; சுத்த வித்தை வைகரியைக் காரியப்படுத்திச் சாக்கிரத்திலே யாக்கும்.

### மேலாலவத்தைத் துரியம்

பின்னும், சத்தி தத்துவம் மேலாலவத்தையில் அதீதத்திலே காலத்தையும் நியதியையுங் கலையையு மெழுப்பும்,

[1]பிராணவாயுவும் புருடனும்.

கலை தழற்போட நீக்கினாற்போல கேவலத்தை நீக்க, ஆன்மா கலையே வடிவாய் மேலாலவத்தைத் துரியப்படுவன்.

### மேலாலவத்தைச் சுழுத்தி

துரியத்திலே பிராணவாயுவைக் கூடி மேலாலவத்தைச் சுழுத்திப்படுவன்.

### மேலாலவத்தைச் சொப்பனம்

சுழுத்தியிலே, சுத்தவித்தை வித்தையை யெழுப்ப, வித்தை ஆன்மாவுக்கு அறிவை யெழுப்பும்; ஈசுர தத்துவம் அராகத்தை யெழுப்பும்; அராகம் ஆன்மாவுக்கு இச்சையை யெழுப்பும்; இப்படி ஆன்மா இச்சா ஞானக்கிரியா சொரூபனை விடத்தில், சாதாக்கிய தத்துவம் புருடனை யெழுப்ப, ஆன்மா புருடதத்துவமாம்; அந்த அவதரத்தில் சிவதத்துவம் பிரகிருதியை யெழுப்ப, பிரகிருதி குணரூபமாய் ஆன்மாவைக்கூட, ஆன்மா முக்குணமே வடிவாய் இச்சித்த தத்துவத்தோடுங் கூடி, உணர்வு மாத்திரமா யிருப்பன்; இவையிற்றுடனே மேலாலவத்தைச் சொப்பனப்படுவன்.

### மேலாலவத்தைச் சாக்கிரம்

சொப்பனத்திலே, சூக்கும தேகமாகிய கருவிகள் அ-ம் வசனாதிகள் ரு-ம், வாயுக்கள் கூ-ம் ஆக உஉ கருவிகளுடனே கூடிப் பருவதேகியாய்ச் சாக்கிரத்திலே பொசிக்குந் தன்மைபோலச் சொப்பனத்திலும் இன்பதுன்பமாகிய கன்மத்தைப் பொசிப்பன். எல்லாக் கருவியுமில்லாமல் எப்படிப் பொசிப்பனென்னில், சகலத்திலே மனாதிகளிலே ஒரு பொருளை நினைத்து, அதை இச்சித்து, அதைக் கிரகித்து, அந்தவிடத்திலே போனதுபோலப் போய், அந்தப் பொருளைக் காண்பதுபோலக் கண்டு, அங்கே சிறிது வசனித்தது போல் வசனித்து, சிறிது செய்ததுபோலச் செய்து, சிறிது அனுபவித்ததுபோல அனுபவித்து, இப்படிப் பலவாய்ச் சுக துக்கப்படுகிறது போலச் சொப்பனத்திலும். திருவருளா

னது மனுதிகளிலே பொசிப்புக்குரிய கருவிகளுடனே கன்மத்துக் கேதுவாக மேலாலவத்தைச் சாக்கிரப்படுவன். அப்படிச் சாக்கிரப் பட்ட விடத்தில், ஞனேந்திரியங்கள் ரு-ம், கன்மேந்திரியங்கள் ரு-ம், பூதங்கள் ரு-ம், புறக்கருவியில் இங்ஙனங் காரியப்பட்டது போகநின்ற ௬அ-ம் ஆக ருரு கருவிகளுடனேயுங் கூடி, உருவமாகிய தூலதேகத்தைப் பொருந்திக் கன்மத்தை அனுபவித்தும் ஆர்ச்சித்தும் நிற்பன். அதனுல் ஆன்மாச் செனன மரணப்பட்டு வரும்.

இந்த மேலாலவத்தை அஞ்சுக்கும் கருவி நின்ற முறைமை ஏதென்னில், துரியாதீதத்திலே புருடன் க, சிவம் சத்தி உ, சூக்குமை க, காலம் நியதி கலை ஆக-௩ ஆக தத்துவம் எ; துரியத்திலே பிராணவாயு க, சாதாக்கியம் க, பைசந்தி க-ஆக ௩; சுழுத்தியிலே சித்தம் க, சுத்தவித்தை ஈசுரம் உ, மத்திமை க, வித்தை அராகம் மாயை ௩, சாத்துவிகம், ராசதம், தாமதம் ௩-ஆக க௦; சொப்பனத்திலே வைகரி க, சத்தாதி ரு, தன்மாத்திரை அந்தக்கரணம் ௩, வாயுக்கள் கூ, வசனுதிகள் ரு-ஆக உ௩; சாக்கிரத்திலே ஞானேந்திரியங்கள் ரு, கன்மேந்திரியங்கள் ரு, பூதங்கள் ரு, பஞ்சபூதத்தின் காரியங்கள் உரு, நாடிகள் க௦, ஆங்காரம் ௩ ஆக ரு௩. அவத்தை யஞ்சுக்குந் தத்துவம் கூ௱.

### மத்தியாலவத்தை

இப்படி மேலாலவத்தைச் சாக்கிரமடைந்த ஆன்மா சாக்கிரத்திலே மத்தியாலவத்தை அடைவன். மத்தியாலவத்தை யேதென்னில், சாக்கிரத்திற் சாக்கிரம், சாக்கிரத்திற் சொப்பனம், சாக்கிரத்திற் சுழுத்தி, சாக்கிரத்தில் துரியம், சாக்கிரத்தில் துரியாதீதம் ஆக ரு.

அது காரியப்படுகிற தெப்படி யென்னில், ஒரு பொருளை ஓரிடத்தில் வைத்து அறியாமல் திகைத்து நின்ற அவதரம் சாக்கிரத்தில் துரியாதீதம். சிறிது பிராணவாயு இயங்கி நினைத்தல் சாக்கிரத்தில் துரியம். அந்தப் பதார்த்தத்தை

எங்ஙனே வைத்தோமென்று விசாரிக்க வந்தவிடம் சாக்கிரத்திற் சுழுத்தி. அந்தப் பதார்த்தத்தை வைத்த இடம் நினைவெழத் தோன்றல் சாக்கிரத்திற் சொப்பனம். அந்தப் பதார்த்தம் புலப்பட அறியவந்த இடம் சாக்கிரத்திற் சாக்கிரம்.

இப்படி சாக்கிரத்தில் மத்தியாலவத்தை யடைவதேதென்னில், கன்மத்துக்கேதுவாக ஆன்மா ஒரு பொருளை யறிய வேண்டில், பொறியிலொன்றும் பூதத்திலொன்றும் அந்தக்கரணங்கள் ச-ம் கலாதிகள்ரு-ம் ஆகப் பதினொரு கருவிகளுங் கூடித் திருவருள் அறிவித்தாலொழிந் தறியாதாகையால், அப்படி அவத்தைப்பட்டு வருவதெனவறிக. இப்படிச் சகலாவத்தை யறிக.

## சுத்தாவத்தை

இனி, சுத்தாவத்தையின் காரியமான நின்மலாவத்தை ஐந்தும் எப்படி யென்னில், நின்மல சாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மல சுழுத்தி, நின்மல துரியம், நின்மல துரியாதீதம் ஆக ரு.

## நின்மல சாக்கிரம்

இது காரியப்படுகிற தெப்படியென்னில் மலபரிபாகம் சத்திநிபாதம் இருவினையொப்பு உண்டான அவதரத்தில், ஆசாரியர் நிருவாண தீட்சைபண்ணின விடத்துப் பூதங்களைத் தெரிசிக்கவே, தூலதேகம் நீங்கும்; இந்திரியங்களைத் தெரிசிக்கவே, பூதங்கள் நீங்கும்; அந்தக்கரணங்களைத் தெரிசிக்கவே, இந்திரியங்கள் நீங்கும்; கலாதிகளைத் தெரிசிக்கவே, அந்தக்கரணங்கள் நீங்கும்; சுத்தத்துவங்களைத் தெரிசிக்கவே, கலாதிகள் நீங்கும்; அருளைத் தெரிசிக்கவே, சுத்ததத்துவங்கள் நீங்கும். இப்படி இங்ஙனஞ் சொல்லப்பட்ட தத்துவங்களின் தொழிலை யறிந்து, இவ்வளவுஞ் சடமென் றறிந்து, நீங்கிய பொறி வேறு நான் வேறு என்று அறிதல் நின்மல சாக்கிரம்.

### நின்மல சொப்பனம்

பெத்த முத்தி யிரண்டினும் உபகரிக்கிற திருவருளுடைய சுதந்தரத்தையும் தன்னுடைய சுதந்தர வீனத்தையும் அறிந்து, சருவ கிருத்தியமுடைய திருவருளே முதன்மையாக அறிதல் **நின்மல சொப்பனம்.**

### நின்மல சுழுத்தி

திருவருளுடைய சருவகிருத்தியத்தை யானுஞ் செய்வேனென்று கருதுதல் **நின்மல சுழுத்தி.**

### நின்மல துரியம்

கேவலம் நீங்கி, அருளினாலே தன்னையும் கண்டு அருள்வழி நிற்பது **நின்மல துரியம்.**

### நின்மல துரியாதீதம்

அந்த அருளுக்கு முதலாகிய சிவத்திலே அழுந்துவது **நின்மல துரியாதீதம்.**

இப்படிச் சுத்தாவத்தையை அறிக.

### தசகாரியம்

இந்த அவத்தையிலே தசகாரியத்துவம் அடங்கும். **தசகாரியங்கள்** எவை என்னில், தத்துவரூபம், தத்துவ தெரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்மதெரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதெரிசனம், சிவயோகம், சிவபோகம் ஆகப்பத்து. இதில் **தத்துவரூபமாவது** அவையிற்றின் தொழிலை யறிதல். **தத்துவதெரிசனமாவது,** அவையிற்றைச் சடமென்றறிதல். **தத்துவசுத்தியாவது,** அவையிற்றைத் தனக்கு அன்னியமென்றறிந்து நீங்குதல். **ஆன்மரூபமாவது** இப்படி நீங்கின அறிவை நானே யெனவறிதல். **ஆன்மதெரிசனமாவது** தற்சுதந்திர வீனத்தை யறிதல். **ஆன்மசுத்தியாவது** தற்செயலற்று அருளாய் நிற்றல். **சிவரூபமாவது** மலமாயை கன்மங்களைப் போக்கித் தற்சுதந்தரத்தையும் ஆன்மாவின் சுதந்தர

வீனத்தையும் அறிவித்துநிற்கிற அறிவே வடிவென் றறிதல். சிவதெரிசனமாவது, ஆன்மாவின் தற்செயலற்ற விடத்து எவ் விடத்தும் இன்பக் காட்சியாய்த் தோன்றுதல். சிவயோக மாவது, ஆன்மா தோன்றாமல் அருளாய் நிற்றல். சிவபோக மாவது, சிவானந்தத்திலே இரண்டற இருத்தல். இப்படி தசகாரியத்தை யறிக.

இந்தத் தசகாரியம், ஆன்மதெரிசனம் ஆன்மசுத்தி ஆன்மலாபம் ஆக மூன்றில் அடங்கும். இதில் ஆன்மதெரிசன மாவது, மலமாயை கன்மங்களை நீங்கிச் சிவஞானத்திற் பொருந்துதல். ஆன்மசுத்தியாவது, அருளிற் பணியற்று ஒடுங் கல். ஆன்மலாபமாவது, ஆனந்தத்தி லழுந்தல்.

இந்த முறைமையிலே ஆசாரியர் அருளினாலே நிட்டை கூடுக. அது கூடாதாகில், கேட்டல் - சிந்தித்தல் - தெளி தலிலே நிற்க. அதுவுங் கூடாதாகில், உண்மைச் சரியை கிரியாயோகங்களிலே உறைத்து நிற்க. அப்படி நிற்கவே, அந்த நிட்டை வந்து கூடும்.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட முறைமையினாலே எந்த நிலையிலே நின்றாலும், குருலிங்க சங்கமமாகிய மூர்த்திகளைப் பொருளென வழிபட்டு இம்மூர்த்திகளிருக்குந் தீர்த்தங்க ளிலே ஸ்நானம் பண்ணி, சிவாகமங்களிலே விதித்தலைச் செய்து விலக்குத லொழிந்து, அஞ்ஞான முடையவர்கள் சார்வை விட்டுச் சிவஞான முடையவர்கள் சார்வா யிருக்கக் கடவன்.

இது மெய்கண்ட சாத்திரத்தின் மார்க்கமென அறிக.

# வாழ்க்கையும் சமயமும்

[கா. இராமநாதன் செட்டியார், பி. ஏ., பி. எல்.]

[திரிசிராப்பள்ளியில் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 36-வது ஆண்டு விழாவில் திருப்பாதிரிப்புலியூர் அருட்திரு ஞானியாரடிகள் தலைமையில் செய்த சொற்பொழிவு.]

இங்கு நமக்குத் தலைவராக எழுந்தருளியிருக்கும் அடிகளார்க்கு வணக்கம்.

தாய்மார்களே! பெரியோர்களே!

**சு**ற்றறிந்தோர் கர்ச்சித்த இந்த மண்டபத்தில் யானும் பேச வந்தது விந்தையே. நாடகத்தால் அடியார்போல் நடித்து உங்களிடையே வந்தேன். அன்பு நிறைந்த சிவநேசர்கள் புறக்கணியா ரென்ற துணிபே இங்கு உங்கள் முன் நிற்கச் செய்தது. இனி விஷயத்திற்குப் போவோம்.

1. கடற்கரை, விடியற்காலம். "கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான். கனையிருளகன்றது காலையம் பொழுதாய்." கடல் பொங்கியது. அலைகள் பனையளவு உயரம் மேலெழுந்து, திடீரெனக் கீழே விழுந்து, விரைவாய்ப் புரண்டு, ஓயாது ஓடியாடி, கரையில் மோதுகின்றன. ஓரே இரைச்சல்; இடையறா இரைச்சல். கரையருகே பல படகுகள் கிடக்கின்றன. எங்கிருந்தோ வந்தாரொருவர். கட்டழகர், கண்ணுக்கினியர். செம்மேனியர். படகருகே சென்றார். அவருடன் வந்த அம்மை பச்சை மேனியள். பவளவாயினள். படகுக்குச் சுக்கானை மாட்டி, அதனை ஆழத்தில் தள்ளி, அதில் ஏறினர் இருவரும். படகு பொங்கும் கடலுக்குள் புகுந்தது. படகில் சென்ற மாலுமியின் ஒரு கை சுக்கானில்; மற்றொரு

கை பாவையை அணைத்தது. இருவரும் கரையைப் பார்த்த வண்ணம் அழகாக நின்றார்கள். கடலாடியும் படகாடியும் அவர்கள் ஆடவில்லை. வாயில் குமிண்சிரிப்போடும், கண்ணில் பேரருளோடும் நிற்கிறார்கள். எப்படிச் சொல்வது இக்காட்சியை? 'பேரருளாளன் பெண்பாலுகந்து'

" அறு சமயம்
பணிவகை செய்து படவு தேறிப்
பாரொடு விண்ணும் பரவியேத்திப்
பிணிகெட நல்கும்."

கரையருகில் கூடினர் பலர். காட்சியைக் கண்டனர். அபாயத்தைக் கண்டஞ்சினர். மாலுமியின் சீலமும் திறமுங் கண்டு வியந்தனர். கோலங்கண்டு செயல் மறந்தனர்.

2. கரையிற் கூடியவர்கட்கும் கடலில் போக ஆசை பிறந்தது. "அண்ணே! அங்கு வரலாமா?" என மாலுமியாரைக் கேட்டனர். மாலுமியும் வரக் கண்காட்டினர். ஒரு கிழவர் "எனக்குத் தெரியும் இந்த வித்தை" என்று சொல்லிக்கொண்டு முதலில் புறப்பட்டுப் படகருகே வந்தார். ஆடுஞ் சுக்கான் படகுக்கு அழகில்லை யென்றும், அவசியமில்லை யென்றும், அதனைக் கீழே தள்ளிவிட்டுப் படகிலேறி கடலுக்குள் மாலுமியை நோக்கிச் சென்றார். படகு தத்தளித்துத் தன்னிஷ்டம் போல் செல்லுகிறது. மாலுமி பக்கம் போக வேண்டுமென்றால், அது மற்றொரு பக்கம் போகிறது. என்ன செய்வார் கிழவர்? திகைத்தார், திண்டாடினார். மாலுமி கயிறு போட்டு, கிழவரைக் கரை சேர்த்தார்.

3. யாவற்றையும் பார்த்திருந்த ஜனங்கள் மாலுமியாய் வந்த மகாதேவரைப் பார்த்து, "தேவரீர் செய்திட்ட வித்தையைக் கண்டு பேருவகை எய்தினோம். கடலில் போவதெப்படி யென்று நாங்களுமறிய ஒரு வார்த்தை சொல்ல

வேண்டும்." என்றார்கள். இறைவர் அருளொடுங் கூறுவர்: "உலகம் கடல்போன்றது. இரண்டிலும் அபாயங்கள் பல. அவைகளை வெல்வதே ஆனந்தம். கடலில் நன்கு போக முடியும். அதுபோல் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். படகென்பது வாழ்க்கை. சுக்கானென்பது சமயம். நாம் குறித்த வழியில் படகு செல்ல சுக்கான் தேவை. வாழ்க்கையும் நல்வழியில் செல்ல சமயந் தேவை. சமயத்தினாலேற்படுவது தூய வாழ்க்கை. வாழ்க்கைக்குத் துணை சமயம். சுக்கானைக் கழற்றி விட்டு கடலுக்குள் சென்ற கிழவன் அறிவிலி. தைரியமாகப் படகில் செல்லுங்கள், சுக்கானை ஒரு கையில் பிடியுங்கள், மற்றொரு கையால் என்ன வேலை செய்யினும் பாதகமில்லை. கையில் சுக்கானை வைத்து, மனத்தில் என்னை வையுங்கள். கடல் பிரயாணம் நன்கு முடியும்." யாவரும் அம்மை அப்பரை வணங்கி நின்று, "பெருவாழ்வே, வாழ் முதலாகிய பொருளே, வாழ்க்கையின் தனிமுதலே, எங்களுக்கு வழிகாட்டியதற்கும், உபதேசம் செய்ததற்கும் செய்யும் கைம்மாறொன்றறியோம். ஆயினும் இந்த நல்வழியை மறவோம்" என்றனர். இறைவனும் இறைவியும் மறைந்தனர்.

4. வாழ்க்கை யென்பது இறைவன் நமக்குத் தந்த சகதிகளை உபயோகப்படுத்தல்; அல்லது நம்மைச்சுற்றி நடக்கும் காரியங்களை யுணர்தல்; அல்லது, உலகில் நடப்பவற்றிற்கு நம்மில் பதிலெழல். விளக்காமலே வாழ்க்கை யென்பதன் பொருள் நமக்குத் தெரியும். சுருங்கச் சொல்லின், வாழ்க்கை படகில் போதல். ஒருவருக்கு படகு கிடைத்தல்போல, வாழ்க்கை பல ஒன்றன்பின் ஒன்றாய் வரலாம்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் ”

பிறக்கலாம். இறைவனைச் சிக்கெனப் பிடிக்கும்வரை இவ்வாறு பலவித பிறப்பில் வாழ்க்கை தொடர்ந்து போகிறது.

5. சமயமென்பது என்ன? அது விஞ்ஞானமல்ல; தத்துவ சாஸ்திரமல்ல. விஞ்ஞானம் பஞ்சேந்திரியங்களால் அல்லது அவைகளுக்கு ஒத்தாசையான கருவிகளால் உண்மையென அறிந்தவற்றை ஆராய்வது. தத்துவ சாஸ்திரம் பஞ்சேந்திரியங்களுக் கெட்டாத உண்மைகளை ஆராய்வது. ஆனால் சமயமோ, பஞ்சேந்திரியங்களுக் கெட்டாத உண்மைகளை அனுசரித்து அவைகளுக்கேற்ப வாழ்வது.

6. ஆகையால் சமயம், படித்து முடிக்கும் விஷயமன்று. அது வாழும் வழி. பெரியவர்களும், “ கலைஞானம் கற்குஞ் சரக்கன்றுகாண் ” என்று அழுத்தமாகச் சொன்னார்கள்.

7. சமயமும் வாழ்க்கையும் பொருந்த வேண்டும். வாழ்க்கையில்லையானால் சமயம் யாருக்கு? சமயமில்லையானால் வாழ்க்கைக்கு வழியுண்டோ? சமயத்தைப் பற்றிப் படித்தால் போதுமா?

“ ஓதியாரு மறிவா ரில்லை ”—சம்பந்தர்.

“ நூலும் வேண்டுமோ நுண்ணுணர் வோர்கட்கே ”—அப்பர்.

8. வாழ்க்கையொடுபொருந்தாச் சமய அறிவு பிரயோசனமில்லை யென்பதற்குச் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

ஒரு குங்கும வியாபாரி தன் சரக்கைக் கழுதைகளின் மேல் ஏற்றிக்கொண்டு போனான். பெரிய கழுதைகள் அதிக பொதி சுமந்து முன்னர்ப் போயின. சிறிய கழுதைகள் பின்னர்ப் போயின. சிறு கழுதையி லொன்று பெரிய

கழுதைகளைப் பார்த்து, "கிழட்டுப் பிணங்கள் மெல்லப் போனாலென்ன ?" என்று கேட்டது. கிழட்டுக் கழுதை ஒன்றுக்கு அதிக கோபம் வந்துவிட்டது: "அசடே, மரியாதை யில்லாமல் பேசுகிறாய். அறிவு கெட்ட உனக்கு வயதென்ன ? எங்கள் வயதென்ன ? அதுதான் கிடக்கட்டும். எங்கள் பெருமையையும் அறியவில்லையே. எங்கள் முதுகில் எவ்வளவு குங்குமம் ? உன் முதுகில் கொஞ்சந்தானே. உயர்ந்த பொருளை அதிகமாகத் தாங்குகிறோம். மேலும் நாங்கள் முன்னால் போகிறோம். ஜனங்கள் முதலில் எங்களைத் தானே பார்த்துச் சந்தோஷப்படுகிறார்கள். இவ்வளவும் யோசியாமல், மரியாதை யில்லாமல் பேசுவது அடுக்குமா ?" சின்ன கழுதைக்கும் கோபம் வந்து விட்டது. அது சொல்லிற்று: "உங்கள் பெருமை எனக்குத் தெரியாதா ? அதனை என்னிடமா அளப்பது ? கழுதைக்கு வயதானது போல வென்று மனிதர்கள் சொல்லுவார்களே ! வயதானது ஒரு பெருமையா ? நிறையச் சுமக்கிறது உயர்வா ? பொருள் உங்களதல்ல; வியாபாரி நினைத்தால் விற்று விடுவான். குங்குமத்தை நெற்றியிலிட்டால் மிக நன்றாக விருக்கும். அது உயர்ந்த பொருளா யிருக்கலாம். நீ இட்டுக் கொண்டாயா ? தூக்கித்தானே சுமக்கிறாய் ? நாம் இட்டுக் கொள்ளும் ஜாதியில்லையே. தூக்குவதில் என்ன பெருமையோ ? ஊரெல்லாம் உன்னைப் பார்த்ததாக நினைக்கிறாய். குங்குமத்தைப் பார்க்கிறார்களே யொழிய, உன்னை யார் பார்க்கிறார்கள் ?" பெரிய கழுதை உரத்த குரலில், "அதிகப் பிரசங்கி, உனக்கு முதுகிலே கண்ணு. எங்களிடத்தில் சொன்ன குறை உன்னிடத்திலில்லையா ?" என்றது. சிறு கழுதை வாயடங்கவில்லை: "நான் உபயோகப்படுத்தாத சுமையைக் கொஞ்சந்தானே தூக்கி வருகிறேன். என் இலட்

சணத்தை எல்லாரும் பார்க்கிறார்களென்று ஏமாந்தா விருக்கிறேன்?" என்றது.

இக்கதையில் தெரிந்துகொள்ளக் கிடக்கும் உண்மைகள் பல. சிலவற்றை மட்டும் கூறுவேன்.

கழுதை குங்குமத்தை முதுகில் சுமக்கிறது; நாம் சமய அறிவை மூளையில் சுமக்கிறோம். குங்குமம் வியாபாரத்திற்காகும்; நம் சமய அறிவை விற்குஞ் சரக்காக்கினோம். கழுதை மேல் குங்குமம் ஒட்டுவதில்லை; நம் சமய அறிவு உள்ளத்திலும் வாழ்க்கையிலும் புகுவதில்லை. குங்குமம் பிறருக்கே பிரயோசனப் படுதல்போல, நம்மறிவும் பிரயோசனப் படலாம். சுமப்பதில் கழுதை கர்வமடைகிறது; கற்ற அறிவும் கர்வம் தருகிறது.

'கழுதை குங்குமம் சுமந்தது' என்னும் பழமொழியை சுந்தரமூர்த்தி நாயனாரும் கையாண்டிருக்கிறார்கள். (பக்கம் 117. 1) மேலும் நம்பிகள் சொல்லுகிறார்:—

"பொதியே சுமந்துழல்வீர்
பொதியாவது மறியீர்". (பக்கம் 152. 9)

9. சமயம் அனுசரிக்கப் படவேண்டியதென ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பலவிடங்களில் சொல்லி யிருக்கிறார்.

"பிணத்தையே நோக்கும் பிராந்துயிர் பரந்தும்
பணத்தையே பார்ப்பன் பண்டிதன் கற்கும்
புத்தகச் சுமையால் சித்தந் தெளியுமோ?
தத்துவப் பொருளைத் தருக்கம் தருமோ?"

(ஸ்ரீ பரமஹம்ஸலீலை: சுத்தானந்த பாரதியார்)

10. வெறும் ஆராய்ச்சிக்கன்று சமயம். அனுசரிப்பதற்கே. இதனை வற்புறுத்த இன்னொரு உதாரணம். இந்த

உதாரணத்தை இரண்டு பெரியார்கள் இரண்டு விதமாகக் கையாண்டனர்.

முதலில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் சொல்லியதை ஞாபகப்படுத்துகிறேன்.

'இரண்டு நண்பர்கள் ஒரு மாந்தோப்பிற்குள் போயினர். ஒருவன் மிக்க உலகறிவுள்ளவன். அவன் அத்தோப்பிலுள்ள மாமரங்களை எண்ணினான். ஒவ்வொரு மரத்திலுமுள்ள மாங்கனிகளை எண்ணினான். தோப்பின் விலையை மதித்தான். அவன் நண்பன் தோட்டக்காரனைத் தேடிச் சென்றான். அவன் உறவைச் சம்பாதித்தான். தோட்டக்காரனுடன் ஒரு மரத்திற்குச் சென்று, அவன் அனுமதியுடன் கனிகளைப் பறித்துத் தின்றான். இவ்விருவரில் யார் சமர்த்தர்? மாங்கனியுண்டவனா? மரமெண்ணியவனா? மாம்பழம் தின்றால் பசி தீரும். மரத்தை யெண்ணி, இலையை யெண்ணிக் கணக்குப்போட்டால் வரும் பலன் என்ன? கற்றவீனன் உலகந்தோன்றிய காரிய காரணங்களை ஆராய்ந்து வாதிடுவன். அறிந்தடங்கியவன், உலகத்தைப் படைத்தவன் நட்பைப்பெற்று அவன் தரும் அருளமுதமுண்டு ஆனந்திக்கிறான்.

11. கனி உவமையைக் கையாண்ட மற்றொருவர் சைவப் பெரியார். அவர் பலரை வலிய அழைத்து நல்லறிவைச் சொல்வது வழக்கம். அவராசைக் கேற்பப் பலர் திருந்தவில்லையே யென்ற கோபமும் அவருக்குண்டு. அவர் சொல்லும் விதத்தைக் கவனிப்போம்.

(தொடரும்)

# சிவஞான சித்தியார் சுபக்கம் மூலமும் சிவாக்கிர யோகிகள் உரையும்

(மலர் - 15 - இதழ் - 8 - 336-ம் பக்கத் தொடர்ச்சி)

பௌஷ்கரே—

ஈஶாநீ பரமா காஷ்டா ஶைவரத்வேந கல்பிதா।
ஜகத்பூரண ஹேதுத்வாத் வ்யிந்நோர் நாதாதி வ்ருத்திபிஃ॥

வக்த்ரேண ஸாம்யதஸ்தஸ்ய புமாந்வக்த்ர மிதீர்யதே।
வோராமலாதி ஸம்ஹாரஸ் தத்விரோதி தயாவிஹ॥

அவோர இதிவிக்யாதஸ் ஸஞ்ஹாவோயம் ஸலக்ஷணஃ।
ஹ்ருதயஞ்சாபி ஸஹாவோ யஸ்மாத்தஸ்மாத் ததைவஹி॥

வாமோஸ்யது ரஹஸ்யத்வாத் ஸூக்ஷ்மத்வாத் த்ருக்க்ரியாத்மகஃ।
கர்தா விஶ்வஸ்ய புத்ராதி கார்யேஷு ஜநகம் யதஃ॥

வாமோ குஹ்யஸ் ததஶ்சாயம் ஶாஸ்த்ரேஸ்மிந் ஸம்மதோபவு
ஸ்வஸ்யேச்சா மாத்ரதஸ்தஸ்ய ஸ்வஶக்தி ப்ரஸராத்மிகாம்॥ [யைஃ।

மூர்திமாஸாதயேத் யஸ்மாத் ஸத்யோமூர்திஸ் ததஸ்ம்ருதஃ।
ஏவம்மந்த்ராஸ்து பஞ்சைதேயைர்நிர்வஹா தநுஶ்ஶிவா॥

ஈஶாந ஶேவரீஸாச பும்வக்த்ரா வோஹ்ருத்ஸ்யலா।
வாமகுஹ்யாச ஸத்யாம் ஸம்ஹாரிணீ ஜநநீ தயா॥

ரோதயித்ரீ திதிஸ்ருஹிஶ் ஶக்திஹிஃ கல்பிதேந்த்ரியா।
அஷ்டாவேதா யஶஸ்விந்யா ஈஶநாத்யா ஸ்த்ரிஶூலிநா॥

ஹாரிணீயா ஶிவஸ்யோக்தா ஸர்வாஹரண ஶக்திகா।
அதவா பரஸம்ஸ்யாநந்தயோதா ஹ்ருத்ய புதலம்॥

யஸ்மாத் தஸ்மாத்இயம்ஶக்தி ஹாரிணீத் யுச்யதேவையை:||
ஜநநீ ஜகதோ ஜந்ம ஸ்வஹாவாஸ்யா மிதஒ்ருதி:||

ரோயுயித்ர்யணு ஸங்வுஸ்ய ப்ரளயே நியமஸ்யிதம்।
ஹோஶேஷ்வபி ஸதஸ்யாபி விஒயாதி யதஸ்தத:||

ஏதாஸ்து ஶக்த்யஸ் திஸ்ரஶ் ஶரீர கரணாத்மிகா:|
அந்தரங்ராஸ் தயாசாங்யே மந்த்ராஸ்ஸந்தி ஶிவாத்மகா:||

ஹ்ருஶ்சிரஶ் சூளிகா வர்மலோசநா ஸ்த்ராணி நாமத:|
ஸத்ஹாவோ ஹ்ருஒயந்தஸ்ய ஶிரஸ்ஸர்வோச் ஶ்ருதோ ரண:||

வஶித்வமபராயநம் யச்ஹிவா ஸோபரிஸ் யிதா।
ஸ்வஹாவ ருப்த மங்யேஷாம் ஸமர்த்யமபி ஶ்ரோபநே||

தேஜ:கவச ஸாயுர்ம்யாத் தந்நாம்நா வ்யபஒிஶ்யதே।
ஸர்வஜ்ஞதா யயா ஶீஜம் யத்நதஸ்தே நிரீக்ஷணம்||

ஸோஸாவப்ர ஸஹஸ்ஸம்ஹோ: ப்ரதாபோ ஹேதிருச்யதே।
—இதி ஈஶாநாஒி மந்த்ர வ்யுத்பத்தி:||

சர்வ ஜகத்திற்கும் மேலாயிருக்கிற யாதொரு குணத்தினலே லோகங்களுக்கெல்லாம் ஈசுவரனுயிருக்கிறுர், அதனலே **ஈசானன்** என்று நாமமாம்.

மூர்த்தாவென்று சொல்லப்பட்டதொழிய, சாக்ஷாத் அவயமல்ல.

தத் உக்தம் பௌஷ்கரே—

இஷ்டேயேந ஜகத்ஸர்வம் குணேநோ பரிவர்திநா।
ஸமூர்க ஸமஷேஶத்வாத் மூர்யநாவயவஸ்தநோ:||

தேவ நராதி தேகாவச்சின்னராயிருக்கிற ஆன்மாக்களிடத்திலே அந்தர்யாமியாய் அதிஷ்டித்துக் கொண்டிருக்கையினாலே, தத்புருஷன் என்னும் நாமமாம்.

தத் உக்தம்—

தஸ்யதஸ்ய தநுவ்யாப்தஸ் தஸ்யமுஷ்ண தியோநஸ:|
தத்ராணுஜீவ்யம் ஜநாச்சாபிஸதத் புருஷவக்த்ரக॥ —இதி.

அந்யத்ராபி—ஸ்வாத்மைவாயம் வஸதி ஸகலப்ராணிநாம் ஈஶ்வரோந்தரிதி ।
அகோர ஸஹ்யோ: பூர்வமேவோக்தம்|

ஆன்மாக்களைத் தர்மார்த்த காமங்களினாலே வஞ்சித்து அதோமாயையிலே கவிழ்க்கையினாலே வாமா ; பிரகாச ஸ்வபாவராகையினாலே தேவர்; ஆனபடியினாலே, வாமதேவர் என்றது.

வாமாஸ் த்ரிவர்ழ வாமத்வாத்—இதி। ௫க

மேல் சர்வகிருத்தியத்திற்கும் சிவனே கர்த்தா என்பதுணர்த்துகின்றது.

அயன்தனை யாதி யாக அரனுரு என்ப தென்னை
பயந்திடுஞ் சக்தி யாதி பதிதலாற் படைப்பு மூலம்
முயன்றனர் இவரே யாகில் முன்னவன் என்னை முற்றும்
நயந்திடும் அவனிவர்க்கு நண்ணுவ தொரோவொன் றாமே. 80

(உரை) அயன்தனை ஆதியாக அரனுரு என்பதென்னை - சிவனுடைய விக்கிரகங்கள் பிரும்மாவே ஆதியாகச் சொல்ல, நீர் சதாசிவத்தை யாதியாகச் சொன்னதென்னை என்னில் ; பயந்திடும் சத்தியாதி பதிதலால் படைப்பு மூலம் - சிருஷ்டியாதி கிருத்தியத்திற்கு ஆதியாகிய பரமேசுவரனுடைய சத்தி பொருந்துதலால், ஐந்து

பேரும் ஐந்து கிருத்தியம் பண்ணுவார்கள். சிருஷ்டியை முதலாக எண்ணுகையினல் தொழில் முதன்மையினுலே பிரும்மாவை முதலாக எண்ணப்பட்டது ; முயன்றனர் இவரேயாகில் முன்னவன் என்னே - ஐந்துபேரும் ஐந்து தொழிலும் செய்யில் இவ்வைவர்க்கும் முன்னவனுகி லயாவஸ்திதனுகி, ஹரன் என்னும் நாமமுடையவர் செய்ததென் எனில் ; முற்றும் நயந்திடும் அவன் - பரிக்கிரக சத்தியாகிய சுத்த மாயையைக் காரியோன்முகமாக [1]க்ஷோபம் பண்ணியும், பிரளயத்திலே ஆன்மாக்களுடைய கர்மங்கள் சங்கார ரூபமாக மாயையிலே யிருந்ததனைப் பலோன்முகமாக்கியும், திரோதானம் பண்ணியும், விஞ்ஞானகலரில் அதிபக்குவர்க்குச் சச்சிதானந்தாவய சாக்ஷாத்காரத்தைத் தரிசிப்பித்தும், இவ்வாறு பஞ்ச கிருத்தியங்களும் ஏது எவ்வாருகவேண்டும் அவ்வாறு திருவுள்ளத்து நோக்கி யிருப்பர். இங்ஙனம் சூக்குமமான கிருத்தியங்களைச் செய்து ஸ்தூல கிருத்தியங்களுக்கு ; இவர்க்கு நண்ணுவது ஒரோவொன்ருமே - சதாசிவர், மகேசுவரர், உருத்திரர், விஷ்ணு, பிரும்மா என்னும் பஞ்ச மூர்த்திகளுக்கும் அனுக்கிரக திரோதான சங்கார ஸ்திதி சிருஷ்டி யென்னும் ஐந்து கிருத்தியங்களும் ஒவ்வொரு கர்த்தாவுக்கு ஒவ்வொரு கிருத்தியம் சுதந்தரமாகவும், நின்ற நான்கு கிருத்தியமும் அனுஷங்கிகமாகவும் பரமசிவனது சக்தியாலே பொருந்தும்.

தத் உக்தம் ம்ருகேந்த்ரே — ஸ்வாபேப்யாஸ்தே வோயயந்ரோயயோஹ்யாந் ரோஜ்யாந்ருந்யந் வாச்யந் கர்மிகர்மா। மாயா ஶக்திர் வித்தியோஹ்யாஃ ப்ரகுர்வந் பஶ்யந் ஸர்வம் யஹ்யயாவஸ்து ஜாதம்॥ —இதி.

இந்த விருத்தத்தில், பிரும்மாதி காரணேசுவரரிடத்திலே சிவனுடைய சத்தி பதிந்து நின்று கிருத்தியங்களைப் பண்ணவேண்டும்

---

[1]க்ஷோபம் பண்ணுதல் - கலக்குதல்.

என்பதற்கு, சத்திகள் அனேகமாகில் சத்திமானும் அனேகராக வேண்டுமாகையால் அனேகேசுவரத்துவம் வரும் என்று மேல் விருத்தத்திலே சங்கை பண்ணி, சத்தியொன்றே யென்பது முதலான உத்தரங் கூறுகின்றது. ௯0

## சத்தியின் இலக்கணம்

சத்திதான் பலவோ என்னில் தாமொன்றே அனேக மாக
வைத்திடுங் காரி யத்தால் மந்திரி யாதிக் கெல்லாம்
உய்த்திடு மொருவன் சத்தி போல்அர னுடைய தாகிப்
புத்திமுத் திகளை யெல்லாம் புரிந்தவன் நினைந்த வாறும். 81

(உரை) சத்திதான் பலவோ என்னில்-பிரும்மாதி காரணேசுவரரிடத்திலே பதிந்து கிருத்தியங்களைப் பண்ணும் சத்தியென்கையால், சத்தி அனேகமாகவேண்டும். சத்தி அனேகமாகில், சத்திமானும் அனேகமாய் அனேகேசுவரத்துவம் வரும், அல்லது, சத்தன் ஒருவனே, சத்தி அனேகை என்னில் [1]அன்யோன்னிய விருத்தாத்திரயா சத்திகள் ஒருவனுக்குச் சமவேதமாகிற பொழுது, விகாரித்துவம் வரும். என்னில், அப்படி வாராதென்றும் உத்தரம்; மந்திரியாதிக் கெல்லாம் உய்த்திடுமொருவன் சத்திபோல் அரனுடையதாகி சத்தி தாமொன்றே காரியத்தால் அனேகமாக வைத்திடும்-ராஜாவினுடைய ஆக்ஞா சத்தியானது மந்திரி சேனாபதி கிராமபாலகன் முதலான பேர்களிடத்திலேயிருந்து தனித்தனி தொழில்களைப் பண்ணிவைக்கிறதுபோல, அரனுடையதாகிய சத்தி யொன்றே கிருத்திய பேதங்களைச் செய்யுமென்று சொல்லப்படும். அப்படிச் சொல்லப்படுவதும்; புத்தி முத்திகளை யெல்லாம் புரிந்தவன் நினைந்தவாறும் - போக மோக்ஷத்தைக் கொடுக்கப்பட்ட அரனுடைய சத்தியானது அந்த அரன் நினைவின் பேதத்தினாலே கிருத்திய பேதத்தால் பேதமாகத் தோன்றும். ௯க

[1]ஒன்றுக்கொன்று விரோதமான மூன்று சத்திகள்.

மேல் அந்தச் சத்தி சொரூபம் ஏதென்பதற்கு உத்தரம்.

சத்திதன் வடிவே தென்னில் தடையிலா ஞான மாகும்
உய்த்திடும் இச்சை செய்தி இவைஞானத் துளவோ என்னின்
எத்திறம் ஞான முள்ள தத்திறம் இச்சை செய்தி
வைத்தலால் மறைப்பில் ஞானல் மருவிடும் கிரியை எல்லாம்.

(உரை) சத்திதன் வடிவு ஏதென்னில் தடையிலா ஞான மாகும் - சத்தியினுடைய சொரூப மேதென்னில், சிவான்ம ஞானம்போலத் தடுக்கப்படாமல் எக்காலத்தும் எத்தேசத்தும் ஸ்வப் பிரகாசையாயிருக்கும்; உய்த்திடும் இச்சை செய்தி இவை ஞானத்து உளவோ என்னில் - பொருந்தப்பட்ட இச்சையானது குணம், கிரியையானது வியாபாரம், இவைகள் ஞானத்திற்கு உண்டோ என்னில்; எத்திறம் ஞானம் உள்ளது அத்திறம் இச்சை செய்தி வைத்தலால் - ஞானம் எவ்வளவுண்டு, அதன் குணமான இச்சையும் கிரியையும் அவ்வளவுண்டென்று சாஸ்திர சித்தமாகை யினாலே; மறைப்பில் ஞானல் மருவிடும் கிரியை எல்லாம் - சத்தி அநிவாரித சொரூபையாகையினாலே, சர்வ கர்த்திருத்துவ சாமர்த் தியத்தையும் தத்குணமான இச்சையையும் அடையாதாமாகில், 'ஞானதி இச்சாத் க்ரியப் பிரயக்தா' என்னும் கிரம நியாயத்தி னாலே, அறிந்ததை இச்சிக்க வேண்டும், இச்சித்ததைப் பண்ண வேண்டும். ஆகையால், 'ஞானேச்சாத் க்ரியை' என்றும் கிரமம் சொல்ல வேண்டும்.

இதுவன்றியும், - ஞாநேச்ஹ க்ருதிநா ஸமாந விஷயத்வம் ஸமாநாஸ்ரயத்வஞ்ச நியதம் - இதி ந்யாயாத்[1] மூன்று பின்ன சொரூபமுமாய், ஏகாச்ரயமுமா யிருக்கவேண்டும், ஆகையால், இச்சையாதியாக மூன்றும் ஒன்றே என்று சொல்கிறது விரோதமென்னில், [2]சத்

---

[1]இதி ந்யாயாத் - என்ற நியாயத்தினாலே. [2]சத்தியம்: மேற் சொன்ன கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று பொருள்படும்.

தியம். ஒன்றையறிந்து, அதை இச்சித்து, அதிலே பிரவர்த்திக்கிறது சீவான்மாக்களுக்கே, சிவனுக்கு அப்படியல்ல என்பது மேற் கூறுகின்றது. கூஉ

ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியையென் றொருமூன் றாகி
நின்றிடுஞ் சத்தி இச்சை உயிர்க்கருள் நேய மாகும்
நன்றெலாம் ஞான சத்தி யால்நயந் தறிவன் நாதன்
அன்றருட் கிரியை தன்னால் ஆக்குவன் அகில மெல்லாம். 83

(உரை) ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியை என்று ஒரு மூன்று ஆகி நின்றிடும் - பரமசிவனுடைய சொரூபமாய் ஸ்வப்பிரகாசை யான பராசத்தி ஒன்றேயாயிருந்து, அதனுடைய விருத்தி பேதத்தி னாலே இச்சா ஞானக் கிரியை யென்று மூன்றாகத் தோன்றும்; சத்தி இச்சை உயிர்க்கு அருள் நேயமாகும் - இச்சாசத்தி, ஆன்மாக் களை அனுக்கிரகம் பண்ண வேண்டுமென்று இச்சித்த அவசரமாம்; நன்றெலாம் ஞானசத்தியால் நயந்து அறிவன் நாதன் - ஆன்மாக்கள் பண்ணின புண்ணியங்களையும் (எல்லாம் என்றதனால்) பாபங்களையும் புண்ணியபாபானுகுணமான தனு கரண புவன போகங்களையும் இதற்கிது வென்று கர்த்தாவானவன் பகுத்தறிவது ஞானசத்தியால்; அன்று அருட்கிரியை தன்னால் ஆக்குவன் அகிலமெல்லாம் - அன்றி யே கிருபையினாலே முன்சொன்ன தனுகரணாதிப் பிரபஞ்சங்களை யுண்டாக்குவது கிரியா சத்தியாலே.

கிரியா சத்தி யென்றது, தன்னுடைய ஸ்பரிச மாத்திரத்தில் விந்துவிலே கிரியை யுண்டாக்குகையினாலே கூறப்பட்டதன்றி, சத்தி ஸ்வயம் கிரியாவதி யென்று சொன்னதல்ல. ஆகையால், சத்தி ஒன்றே. கூ௩

மேல் பரமேசுவரனும் ஆன்மாவும் [1]ஸ்வாமி பூத்யபாவம் என்ப துணர்த்துகின்றது.

---

[1]ஸ்வாமி பூத்ய பாவம் - ஆண்டான் அடிமைத் திறம்.

சீவனும் இச்சா ஞானக் கிரியையாற் சிவனை யொப்பன்
ஆவனென் றிடில்அ ணுதி மலம்இவற் றினைம றைக்கும்
காவலன் இவன்செய் கன்மத் தளவினிற்கொடுப்பக் காண்பன்
பாவியாம் புத்தி முத்திப் பயன்கொளும் பண்பிற் றாகும். 84

(உரை) சீவனும் இச்சா ஞானக் கிரியையால் சிவனை யொப்பனவன் என்றிடில் - ஆன்மாவும் இச்சா ஞானக் கிரியாவானகையாலே, சிவனுக்குச்சரியாகையால், சுதந்தரனுவனென்று சொல்லில்; அணுதிமலம் இவற்றினை மறைக்கும் - அணுதியே அஞ்ஞானமானது ஆன்மாவினுடைய இச்சாஞானக் கிரியைகளைத் தகைந்து கொண்டிருக்கும்; காவலன் இவன் செய் கன்மத்தளவினிற் கொடுப்பக்காண்பன் - ரக்ஷிதாவான சிவன் இந்த ஆன்மா பண்ணின கன்மானுகுணமாக ஞானத்தைப் பிரகாசிப்பிக்க, அந்தப் பிரகாசிதமான ஞானத்தினுலே விஷய ஞாதா ஆவன்; பாவியாம் புத்தி முத்திப் பயன்கொளும் பண்பிற்றாகும் - உண்டாவதான போக மோக்ஷமாகிய புருஷார்த்தத்தைச் சிவன் கொடுக்க அனுபவிக்கும் முறையாவது, சிவன் சுதந்தரனுன சுவாமியும், ஆன்மா ஈசஸஹாத்கீத வியாபாரனுகிய பூத்யனுமாம்.

பூத்யன் என்பதற்குப் பொருள், வேலை செய்து கூலி பெறுபவன் என்பதாகையால், இவ்விடத்து ஆன்மா செய்கிற கன்மமே வேலையும், அந்தக் கன்மானுகுணமாகச் சிவன் கொடுக்கும் பலனே கூலியும் என அறிக. சூ தூ

## இலய போக அதிகாரம்

மேல் கர்த்தாவுக்குச் சத்திபேதத்தால் மூர்த்திபேதமுணர்த்துகின்றது.

ஞானமே யான போது சிவன்தொழில் ஞானம் ஒக்கில்
ஈனமில் சதாசி வன்பேர் ஈசனும் தொழில.தேறின்
ஊனமேல் கிரியை வித்தை உருத்திரன் இலய போகம்
ஆனபே ரதிகா ரத்தோ டதிகா ணத்த னுமே. 85

(உரை) ஞானமே யானபோது சிவன் - ஞானசொருபமேயாய் நின்றபோது சிவன் என்னும் நாமம்; தொழில் ஞானம் ஒக்கில் ஈனமில் சதாசிவன்பேர் - ஞானம் கிரியை சமமாய் நின்றபோது சதாசிவன் என்னும் பெயராம்; ஈசனும் தொழிலது ஏறின் - கிரியை அதிகமாகில் ஈசுவரன் என்னும் பெயராம்; ஊனமேல் கிரியை வித்தை உருத்திரன்[1] - கிரியை குறையில், சுத்தவித்தை யாதிபதியான உருத்திரன் என்னும் பெயராம்; இலயபோகம் ஆனபோராதி கரணத்தன் ஆமே - இலயபோகாதிகார ஸ்தானமான பரநாதம் சாதாக்கியம் மகேசுவரம் என்னும் ஸ்தானங்களை அதிஷ்டித்துக் கொண்டு கிருத்தியங்களைப் பண்ணுவர்.

இவ்விடத்து இச்சா சத்தியைச் சொல்லா திருந்ததது, ஞானக் கிரியை யுள்ளவிடத்தில் இச்சா சத்தி சித்தம், மூன்றிடத்திலும் இச்சாசத்தி யுண்டாயிருக்கும் என அறிக. கூடு

மேல் மூர்த்தி லக்ஷண முணர்த்துகின்றது.

*வித்தையோ டீசர் சாதாக் கியஞ்சத்தி சிவங்கள் ஐந்தும்*
*சுத்தகத் துவஞ்சி வன்றன் சுதந்தர வடிவ மாகும்*
*நித்தமென் றுரைப்பர் காலம் நீங்கிய நிலைமை யாலே*
*வைத்திலர் மூற்பிற் பாடு வருவித்தார் கருமத் தாலே.* 86

(உரை) வித்தையோடு ஈசர் சாதாக்கியம் சத்தி சிவங்கள் ஐந்தும் சுத்த தத்துவம் - சுத்த வித்தை ஈசுவரம் சாதாக்கியம் சத்தி சிவம் என்று சொல்லப்பட்ட ஐந்தும் சுத்த மாயையில் தோற்றப் பட்ட தத்துவங்கள்; சிவன்தன் சுதந்தரவடிவமாகும் - சிவன்தானே சுத்த மாயையிலே உதிப்பித்து அதிலே அனுப்பிரவிஷ்டமாம்

---

[1] 'உருத்திரன் இலயபோகம் எனப் பாடமோதில், பரமன் இப்பெயருக்கு அர்த்தமன்றென அறிக; சிவனுக்கே இலயம் முதலிய கிருத்தியங்கள் உரித்தென அறிக; ஆதலால், உருத்திரன் என்பது கூடாது' என்பர் மறைஞான தேசிகர். அவர் கொண்ட பாடம் 'ஒளிர் சிவன்' என்பது.

விக்கிரகம்; நித்தமென் றுரைப்பர் காலம் நீங்கிய நிலைமையாலே - காலாதீதனான சிவனுக்கு அதிஷ்டேய ஸ்தானமானதுகொண்டும், அசுத்தமாயா காலத்தினால் அபரிச்சேதமாகையாலும், நித்தமென்றும் சொல்லுவார்கள்; வைத்திலர் முற்பிற்பாடு வருவித்தார் கருமத்தாலே - இந்தப் பஞ்ச தத்துவங்களுக்கும் கிருத்திய பேதமாதி முற்பிற்பாடு அல்லது வஸ்துத முற்பிற்பாடு இல்லை.

தத் உக்தம் தத்வப்ரகாஸே—பஞ்சா நாமப்யேஷாங் நஹிக்ரமோஸ்தீஹ கால ரஹிதத்வாத் வ்யாபாரவஸாதேஷாம் விஹிதாவஹு கல்பநா ஸாஸ்த்ர ।—இதி

சிவதத்துவம் சத்திதத்துவம் இரண்டும் சிவனுக்கும் சத்திக்கும் அதிஷ்டேய 'ஸ்தானமாயிருக்கும்; சாதாக்கியதத்துவம் சதாசிவத்துக்கு அதிஷ்டேயஸ்தானமா யிருக்கும்; ஈசுவரதத்துவம் மகேசுவரனுக்கு அதிஷ்டேயஸ்தானமா யிருக்கும்; சுத்தவித்தை உருத்திரதேவருக்கு அதிஷ்டேயஸ்தானமா யிருக்கும். சுசு

மேல் கர்த்தா அனேக மூர்த்திகளைத் தரித்தும், [1]சிதேக ரூபமான தன்மை பிறழான் என்பதுணர்த்துகின்றது.

ஒருவனே இராவ ணாதி பாவகம் உற்றாற் போலத்
தருவன்இவ் வுருவ மெல்லாம் தன்மையுந் திரியா னாகும்
வரும்வடி வெல்லாஞ் சத்தி சத்திதான் மரமுங் காழ்ப்பும்
இருமையும் போல மன்னிச் சிவத்தினோ டியைந்து நிற்கும்.

(உரை) ஒருவனே...திரியானாகும் - கூத்தாடி யொருவனே இராவணாதிகளைப் போல ரூபத்தையும் அபிநயத்தையும் பிறருக்குக் காட்டித் தான் தன்னுடைய சொரூபத்தைக் கெடாது நின்றது போல, கர்த்தாவும் இங்ஙனம் சொல்லப்பட்ட பஞ்ச கிருத்தியத்திற்காக இப்படி அனேக விக்கிரகங்களை அதிஷ்டித்துக் கொண்டிருந்து

---

[1]சிதேகரூபம் - ஞானம் என்ற ஒரே ரூபம்.

கிருத்தியங்களைப் பண்ணியும், அகண்டாகார சச்சிதானந்த சொரூபம் மாறுபாடாகான். அஃது எவ்வாறென்னில் ; வரும் வடிவெல்லாம்... இயைந்து நிற்கும்-இங்ஙனம் வரப்பட்ட திருமேனி யெல்லாம் சிற்சத்தியே. அந்தச் சத்தியானது மரமும் வயிரமும் போலப் பிரிக்கப் படாததாய்ச் சிவத்துடனே பொருந்தி நிற்கும் கூஎ

மேல் இதுவுமதுவென் றுணர்த்துகின்றது.

பொன்மைநீ லாதி வன்னம் பொருந்திடப் பளிங்க வற்றின்
தன்மையாய் நிற்கு மாபோல் சத்திதன் பேத மெல்லாம்
நின்மலன் தானாய்த் தோன்றி நிலைமையொன் றாயே நிற்பன்
முன்னருட் சத்தி தன்பால் முகிழ்க்குந்தான் முளையான் அன்றே.

(உரை) பொன்மை நீலாதி வன்னம்...நிற்குமாபோல் - பொன்மையாதி வன்னங்களாலாகிய ஒரு வஸ்து சுத்த ஸ்படிகத்திலே சம்பந்தித்த பொழுது, அந்த ஸ்படிகமும் அந்த நிறமாகவே பார்ப்போருக்குத் தோன்றி நின்றாற்போல ; சத்தி தன்பேத மெல்லாம்... நிற்பன் - சத்திகள் பேதமாகிய விக்கிரகங்களெல்லாம் தானேயாய்க் காண்பித்தும் பேதமன்றித் தான் ஒரு தன்மையாயே நிற்பன், அந்தச் சத்தி யாதோ எனின்; முன்னருட் சத்தி தன்பால் முகிழ்க்கும் தான் முளையான் அன்றே- அந்தக் கர்த்தாவினிடத்திலே முதலே கிருபையாகிய பராசத்தி உதித்து, அனேக பேத சத்திகளாம். தான் ஒன்றிலும் உதியாதவனாகி, அனாதியே சர்வகாரணத்திற்கும் பரம காரணனாகி நின்றான்.

தத் உக்தம் ரத்நத்ரயே[1]—

பராபேக்ஷாரூபம் யத்விஜ்ஞாநம் ஶிவஸம்ஜ்ஞிதம் ।
தஸ்யஶக்தி ஃ பராபேக்ஷா ரூபமாஹுர் விபஶ்சிதஃ॥

---

[1]இரத்தினத் திரயம் என்ற இந்த வடநூலைச் சிவஞான சுவாமிகளும் குறிப்பிடுகிறார் (சித்தியார் 59 உரை).

ஆகாரத்வயஸம்வித்தே ரஸேஷஸ்யாபி வஸ்துத |
பராஈபேக்ஷாஹ்யாம் அஸ்திமாக்திஸ் மிவாஸ்ரயா ॥ சுஅ

மேல் சத்தி சிவமே பிரபஞ்சத்திற்குப் பரம காரணமென் றுணர்த்துகின்றது.

சத்தியுஞ் சிவமு மாய தன்மைஇவ் வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியு மாக
வைத்தனன் அவளால் வந்த ஆக்கம்இவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையும் அறியார் பீட லிங்கத்தின் இயல்பும் ஓரார். 89

(உரை) சத்தியும் சிவமுமாய தன்மை இவ்வுலக மெல்லாம் - சத்தியும் சிவமும் பொருந்தி நின்றமையினாலே இந்த உலகங்களெல்லாம் உண்டாயின. பொருந்திநின்ற முறைமை எவ்வாறென்னில்; ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் - சைதன்னிய சொரூபமானது ஒத்திருக்க, விக்கிரகங்கள் ஈசுவரனென்றும் ஈசுவரியென்றும் புருஷரூபமும் ஸ்திரீரூபமுமாகப் பேதமாம். ஆகில், பேதம் ஏனென்னில்; உணர் குண குணியுமாக வைத்தனன் - விக்கிரகங்களன்றிச் சத்தராய் நின்ற பொழுது, சத்தி குணமும் சத்தன் குணியுமாய் நின்று, அவ்வாறே வஸ்துக்களெல்லாம் குணகுணிகளாகவே உண்டாக்கி நிறுத்தினான்; அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கையெல்லாம் - ஆன்மாக்களுக்குத் தனு கரண புவன போகம் இவைகளெல்லாம் அந்தச் சத்தியாலே உண்டாக்கப்பட்டதே; இத்தையும் அறியார் - நிரீசுவரவாதிகளாயிருக்கிற பேர்கள் அதை யறியாமல் [1]அந்யதாவாகச் சொல்வார்கள். அப்படிச் சத்தி சிவங்கள் உண்டாகக் கண்டதில்லை, இவ்விடத்து ஸ்திரீ புருஷ சம்யோகத்தினால்தானே பிரஜோற்பத்திகள் உண்டாகக் கண்டோமென்று பிரத்தியட்சவாதிகள் சொல்லில், அப்படி ஸ்திரீ புருஷ சம்யோகத்தினாலே உண்டாகிறதும் அந்தச் சத்தி சிவங்கள் நின்ற முறைமையினாலே, அஃது எவ்வாறென்னில்; பீட லிங்கத்தின் இயல்பும் ஓரார் - சிவன் நாதரூப

[1]அந்யதாவாக - வேறாக.

லிங்கமாகவும், சத்தி இந்த ரூபமான பீடமாகவும், யோனியும் லிங்கமுமாக, சம்பந்தத்தினாலே சகல பிரஜோற்பத்திகளை உண்டாக்குகிறதும் அறியார்கள்.

தத் உக்தம் வாதுளே—

நாதோலிங்க மிதிஜ்ஞேயம் பிந்து: பீடமிதிஸ்ம்ருதம்।
நாதபிந்து யுதம்ரூபம் கர்மஸாதாக்ய முச்யதே॥

லிங்கம்ஸம்ஹா ரிதிஜ்ஞேயம் பீடம்ஸக்தி ருதாஹ்ருதம்।
யோகிலிங்க ப்ரகாரேண ஜகத்ஸ்ருஷ்டி யர்த்யகாரணம்॥

ஸதாஸம்யோக ரூபத்வாத் கர்மரூப முதாஹ்ருதம்।
லிங்கேஸ்து ஜாயதேதத்ர ஜகத்ஸ்தாவர ஜங்கமம்॥

தஸ்மாத்லிங்கம் விஸேஷேண கர்மரூப முதாஹ்ருதம்।—இதி.

## பதியின் சிறப்பிலக்கணம்

முதல் விருத்தத்திலே[1] சித்துருவென்று உபக்கிரமித்து, [2]மத்யே அறுபத்தெட்டு விருத்தம் [3]பராமர்சம் பண்ணி, மேல் அந்தப் பராமர்சத்திலே வந்த ரூபம், அரூபம், ரூபாரூபம், குணம், கிரியை இவைகளெல்லாம் உபசாரமல்லது இயல்பல்ல, கேவல சுத்த சைதன்னிய மாத்திரமே சிவசொரூபம், தத்[4]சன்னிதி மாத்திரத்திலே பஞ்சகிருத்தியமுண்டாவதென்று உபசம்மாரம்[5] பண்ணுகின்றது.

சிவன்உரு அருவும் அல்லன் சித்தினோ டசித்தும் அல்லன்
பவமுதற் றொழில்க ளொன்றும் பண்ணிடு வானும் அல்லன்
தவமுதல் யோக போகந் தரிப்பவன் அல்லன் தானே
இவைபெற இசைந்தும் ஒன்றும் இசைந்திடா இயல்பினானே.

---

[1]முதல் விருத்தம் - முதல் சூத்திரத்தின் முதல் விருத்தம் (21). [2]மத்யே - மத்தியிலே. அறுபத்தெட்டு விருத்தம் - 22 முதல் 89 வரையிலுள்ள விருத்தங்கள். [3]பராமர்சம் - ஆராய்ச்சி. [4]தத் - அதனுடைய. [5]உபசம்மாரம் - முடிவு செய்தல்.

(உரை) சிவன் உரு அல்லன் - அனந்தேசுவர ஸ்ரீகண்ட பரமேசுவர காலருத்திர விஷ்ணு பிரும்மாதி மூர்த்திகளைத் தனது [1]சமவாய சத்தித்தவாரா அதிஷ்டித்து நின்றுகொண்டு, சிவன் உருபியுமல்லன்; அருவும் அல்லன் - சுத்தாவத்தையிலே [2]அகளை யாகிய சிற்சத்தி மூர்த்திமானாக நின்றதுகொண்டு, சிவன் அருபியு மல்லன்; சித்தினோடு அசித்தும் அல்லன் - சித்தாகிய ஈசுவர சமவாய சத்தியானது தத்துவமும் அசித்தாகிய விந்து மூர்த்தியுமாகிக் கூடின விடத்திலே பிரபாவரூபமான பஞ்சமந்திரதனு வென்றது கொண்டு, சிதசித்தாத்மகமான ரூபாரூபியுமல்லன்; பவமுதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடுவானும் அல்லன் - பிரும்மா விஷ்ணு உருத்திர மகேசுவர சதாசிவரிடங்களிலே வேறற [3]அபிவியக்தியாக நின்றும், அவர்கள் பண்ணும் சிருஷ்டி ஸ்திதி சம்மார திரோபாவ அனுக்கிரகமாகிய கிரியைகளைப் பண்ணினவனுமல்லன்; தவமுதல் யோகம் தரிப்பவன் அல்லன் - தவமாகிய [4]அணிமாதி அஷ்டாங்க யோகசாதனையை முனிகள் பொருட்டுத் தான் செய்துகாட்டிய ஸ்ரீகண்ட பரமேசுவரனை வேறற நின்றும், அந்தச் சாத்துவிக குணத்தையுடையவனுமல்லன்; போகம் தரிப்பவன் அல்லன் - உமாமகேசுவரனை வேறறநின்றும், அந்த இராசத குணத்தையுடைய வனுமல்லன். சம்மாரத்தைப் பண்ணும் காலருத்திரனை வேறற நின் றும், அந்தத் தாமச குணத்தையுடையவனு மல்லன். [5]'அகில கரோதீதி கர்த்தா' என்னும் [6]வியுத்பத்தியால், கர்த்தாவென்பது சிவ னுக்கு எப்படிக் கூடும் என்னில்; தானே இவைபெற இசைந்தும் ஒன்றும் இசைந்திடா இயல்பினனே - தனது சன்னிதி மாத்திரத் திலேதானே ஆன்மாக்களுடைய போக மோக்ஷார்த்தமான சிருஷ் டியாதி பஞ்ச கிருத்தியங்களும் பொருந்தும், தொழில் குணம்

---

[1]சமவாய சத்தி - நீக்கமின்றி நிற்கும் சத்தி. [2]அகளை - நிஷ்களை. [3]அபிவியக்தியாக நின்று - வெளிப்பட்டு நின்று. [4]அணிமாதி - அணிமா முதலான அட்டமாசித்திகள்; அஷ்டாங்கயோகம் - இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம் தாரணை, தியா னம், சமாதி என்னும் எட்டு. [5]அகிலத்தையும் செய்கின்றமையினாலே கர்த்தா. [6]வியுத்பத்தி - சொற்பொருட் காரணம்.

இச்சை வெறுப்பு விகாரம் ஒன்று மல்லாத சுத்த சைதன்னிய சொரூபமே சுபாவமாக உடையவன்.

தத் உக்தம் ஷேவீகாலோத்தரே—

விஜ்ஞப்தி மாத்ரோஹி ஸஹார்த்யஸ்ய
ஸர்வத்ர யஸ்மாத் ஸததம் விமுக்த:|
நாஷேய ஹேயோப் யஹம் ப்ரத்யாஸ்
திஷ்டர் ஸஹா வ்யூம்ஹ மயோ விமோக:||

யோஸௌ ஸர்வேஷு ஸாஸ்த்ரேஷு பட்யதேஹிம்ஹேஸ்வர:|
அகாயோ நிர் குணோஹீதி நிரஞ்ஜந நிஷ்ப்ரதிமந் நிரீஹம் ||

ஞஸ்ய மஸ்ராவ்ய மசிந்த்யரூபம் ஸிவஸ்ச கர்த்ரு |

சிவனுக்கு ஆதாரதேக கரணாதிகளெல்லாம் தனது சமவாய சத்தி யென்பதற்குச் சம்மதி:

ஸ்ரீமந் மதங்கே—

அடிபத்யுரபிஜ்ஞாநா ஸ்வஸக்தி கரணாத்மகம்|
காஷ்டாஸைவ பராஸூக்ஷ்மா ஸர்வஜிக்காம்ருதாத்மிகா ||

வ்ருக்ஷஸ்தாவரணா ஸாந்த வஸ்தமாத்ராதி லாலஸா |
ஆஞந்தோ பரதாஸாயீ வீ மூர்திர்வே நோபசர்யத ||—இதி.

இந்த முதற் சூத்திரம் எழுபது விருத்தத்திஞல், பிரபஞ்சம் ஆண் பெண் அலியாதி காரிய ரூபமாகையிஞலே, இந்தக் காரியத்துக்குக் கர்த்தா வொருவன் உண்டென்றும், தாம் அதைக் கண்ட பொழுது, புகையைக் கண்டபொழுது இதற்குக் காரணமா யிருக்கிற ஈரவிறகோடே கூடின அக்கினி யுண்டென்று அறிந்தது போல, இதற்குக் காரணமா யிருக்கிற [1]ஆத்ரேந்தந ஸம்யுக்தாக்நி

[1]இங்கே விறகிஞுடைய சம்பந்தம் இருக்கிறது.

புண்டென்று அறிந்து, அதுபோலச் சிதசித்து ரூபமா யிருக்கிற பிரபஞ்சத்தைக் கொண்டு இதற்குக் காரணமாக ஆன்மா ஆச்ரயமா யிருக்கிற மாயையிலே ஈசுவர சத்தி சம்பந்த முண்டென்றும், இப்படிப்பட்ட சத்தியாகிற தர்மத்துக்கு தர்மியாக ஈசுவரனுண்டென்றும், ஆன்மாக்கள் பண்ணுகிற புண்ணிய பாவங்களாகிய காரணத்தினாலே மேல் சுகதுக்கங்களாகிய காரிய முண்டாம், ஆகமத்தினாலே அந்தச் சுகதுக்கானுபவமாகிய சொர்க்க நரகமுண்டென்றும் அறிவித்தது.

ஸா ந்ரிகிர்தேஹஸ் ஸம்ப்ரமத்வாத் அங்யாஸ்வநீயவேதி ।

மேலும், இந்த விசுவமானது மாயையாகிற உபாதானத்திலே நின்றும் ஒரு கர்த்தாவினாலே உண்டாகவேண்டும், [1]மிருத் பிண்டமானது கடாதிகளாகிறதற்குக் குலாலனை அபேக்ஷிக்குமாபோல.

தத் உக்தம் பௌஷ்கரே—

கோநாப் யஸ்யவிதம் விஶ்வம் கார்யம் ஸ்யாத் ஹஸ்மஹாவத ஃ!
யதா குலால ஸாபேக்ஷா ம்ருத்யேஷாங்வயீ புநரிதி ॥—இதி. ௭௦

## முதற்சூத்திர உரைச் சிறப்புப்பாயிரம்

புண்ணியன் சிவாக்ர யோகி புகழ்சிவ ஞான சித்தி
நண்ணுமு தற்சூத் ரத்தின் நலந்தரு பொருளை யாய்ந்து
திண்ணிய உலகிற் கேது திட்டாந்த பூர்வ மாக
அண்ணலாம் அரன்கர்த் தாவென் றறிந்திட உரைசெய் தானே.

ஸ்ரீமத் அதிவர்ணாசார்யவர்ய சைவ பரிபாலக
சிவாக்கிர யோகியர் பண்ணின
சிவஞான சித்தியார் முதற் சூத்திர வியாக்கியானம்
சமாப்தம்.

[1] மிருத் [illegible] கடாதிகள் — குடம் [illegible]தலான பாத்திரங்கள்.

# ஞானியார் சுவாமிகள் நினைவு நிதி

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளுடைய நினைவு நிதிக்குக் கீழே குறித்துள்ள அன்பர்கள் பொருளுதவி புரிந்துள்ளார்கள். ஏனைய அன்பர்களும் விரைவில் தாங்கள் விரும்பிக் கொடுக்கக் கருதும் பொருளை விரைவில் கொடுத்து உதவி புரியுமாறு வேண்டுகிறேன்.

| திருமிகு | | ரூ. | அ. |
|---|---|---|---|
| க. அரங்கசுவாமி முதலியாரவர்கள் | ... | 108 | 0 |
| அ. கு. காமாக்ஷியம்மையாரவர்கள் | ... | 100 | 0 |
| மயிலைகிழார் இளமுருகனாரவர்கள் | ... | 100 | 0 |
| திவான்பகதூர். டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்கள் | | 50 | 0 |
| ராவ்பகதூர். சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் | | 50 | 0 |
| ராவ்சாஹிப்-எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் | ... | 50 | 0 |
| ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் | ... | 25 | 0 |
| மு. அருணாசலம் பிள்ளையவர்கள் | ... | 20 | 0 |
| தெ. பழ. சித. சதாசிவம் செட்டியாரவர்கள் | ... | 16 | 0 |
| தி. க. சுந்தரம் பிள்ளையவர்கள் | ... | 10 | 0 |
| தலைவர், சைவ சித்தாந்த சபை, பழநி | ... | 10 | 0 |
| கா. இராமநாதன் செட்டியாரவர்கள் | ... | 6 | 4 |
| கொழும்பு அருள் தியாகராசா அவர்கள் | ... | 5 | 0 |
| என். எஸ். இரத்தினசபாபதி செட்டியாரவர்கள் | ... | 5 | 0 |
| K. A. சிவஞானம் பிள்ளை அவர்கள், வழக்கறிஞர், அம்பாள்சமுத்திரம் | ... | 5 | 0 |
| | ஆ | 560 | 4 |

மு. பாலசுப்பிரமணியன்,

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 15. No. 9

# சமாஜ வெளியீடுகள்

# CATALOGUE OF SAMAJAM BOOKS

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| அப்பர் தேவாரம் | ... | 1 | 0 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் | .... | 0 | 12 |
| திருவாசகம் " | .... | 0 | 10 |
| " (பல ஆராய்ச்சி அகராதிகளுடன்) | ... | 0 | 12 |
| திருவாசகம் மூலம் | ... | 0 | 2½ |
| திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு—குறிப்புரையுடன் | .... | 0 | 9 |
| அ, கூ திருமுறைகள் " | .... | 1 | 2 |
| திருமந்திரம் — (இரண்டாம் பதிப்பு) | .... | 1 | 0 |
| பதினோராந் திருமுறை " | .... | 0 | 10 |
| பெரியபுராணம் " | .... | 1 | 8 |
| மெய்கண்டாரும் சிவஞான போதமும் | .... | 0 | 8 |
| சங்கநூற்புலவரகராதி | .... | 0 | 1 |
| தலயாத்திரைப் படம் | .... | 0 | 1 |
| திருப்புகழ் (அருணகிரியார் அருளியவை, முற்றும்) | - | 3 | 0 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை | ... | 0 | 10 |
| சீவக சிந்தாமணி | .... | 1 | 8 |
| சிவஞானபாடியம் | .... | 1 | 0 |
| சிவஞானபோதச் சிற்றுரை | .... | 0 | 8 |
| சிவஞான சித்தியார் உரை | .... | 0 | 12 |
| சிவப்பிரகாசம் மூலமும் உரையும் | .... | 1 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் | .... | 1 | 0 |
| சித்தாந்த சாத்திரம் மூலமும் உரையும் | .... | 3 | 0 |

தபாற்கூலி, பார்சல் செலவு முதலியன வாங்குவோர் செலுத்த வேண்டும். முன்பணம் அனுப்புக.

**சைவ சித்தாந்த மகா சமாஜம்**
22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, by T. V. Volaganathan (Publisher) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.